நம்மாழ்வார் அருளிய

# திருவாசிரியம்

வித்வான் நியாய சிரோமணி
பிள்ளைலோகம்
**ஸ்தலசயனத்துறைவார்**

—x—

பிரபன்ன ஜனகூடஸ்தரான நம்மாழ்வார் அருளிய திவ்யப் பிரபந்தங்களில் மிகச்சிறியது திருவாசிரியம். இது ஏழு பாசுரங்களைக் கொண்டது; ஆசிரியப்பா என்னும் பாவினத்தில் அமைந்தது; சொற்சுவையும் பொருட்சுவையும் கொண்டு உலகத்தார்க்கு அருமருந்தாக விளங்குகிறது.

தன்னுடைய ஞானக்கண்ணுக்கு இலக்கான எம்பெருமானை நோக்கி, தேவரீருடைய அநுபவத்திற்கு இடையூறாக இருக்கும் இந்தத் தேக ஸம்பந்தத்தை நீக்கியருளவேணும்' என்று நம்மாழ்வார், முதல் பிரபந்தத்தில் (திருவிருத்தத்தில்) 'பொய் நின்ற ஞானமும்' என்று தொடங்கிப் பிரார்த்தித்தார். ஆனால், எம்பெருமான் இவருடைய அவசரப் பிரார்த்தனையை உடனே ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. 'இவருக்கு ஏன் இந்த அவசரம்! நலமந்தமில்லதோர் நாடாகிய பரமபதம் சென்று குணாநுபவத்தைச் செய்யவேண்டும் என்பதுதானே இவரது நோக்கம்! அந்த அநுபவத்தை இந்த உலகத்திலேயே இவருக்குக் கொடுத்துவிட்டால் என்ன? அநுபவ பரீவாஹமாகச் சில பிரபந்தங்கள் தோன்றி அப்ருத வர்ஷமாக இருந்து கொண்டு உலகத்தை உஜ்ஜீவிப்பிக்கச் செய்யட்டுமே என்று நினைத்தான். தன் ஸ்வரூபம், ரூபம், குணம், ஐச்வர்யம் ஆகியவற்றைக் காட்டிக் கொடுத்தான். நம்மாழ்வார் அவனது மேன்மை நீர்மை வடிவழகு ஆகியவற்றை இங்கிருந்துகொண்டே ஏழு பாசுரங்களால் அநுபவிக்கிறார்.

முதற்பாசுரத்தில் பகவானின் திருமேனி வைலக்ஷண்யத்தில் ஈடுபடுகிறார். இரண்டாம் பாடலில்: இப்படிப்பட்ட எம்பெருமானின் திருவடித் தாமரைகளைச் சூடவேண்டும் என்று விரும்பும் விவேகிகளைப்போல் பகவத்விஷயத்தில் ஆசை மேலிட்டு இருப்பதே ஸ்வரூபமாகும் என்று நினைக்கிறார். மூன்றாம் பாடலில்:—

அவனடியார்களுக்கே ஆட்பட்டிருக்கும் வாய்ப்பு தமக்கு ஏற்பட வேண்டும் என்று பாரிக்கிறார். நான்காம் பாடலில்:- அவர்களைப் போல் (ஸ்ரீவைஷ்ணவர்களைப்போல்) பகவானுக்குப் பல்லாண்டு பாடுவதையே பொழுதுபோக்காகப் பெறவேண்டும் என்று விரும்புகிறார். ஐந்தாம் பாடலில்:- உவந்த உள்ளத்தனாய் உலகளந்த வரலாற்றை நினைத்து உகக்கிறார். ஆறும்பாடலில்:- இப்படிப்பட்டவனை வணங்காமல் உலகம் க்ஷுத்ரதேவதைகளை (வேறு தெய்வங்களை) வணங்கிப் பாழாகிறதே! என்று நினைத்துக் கதறுகிறார். ஏழாம் பாசுரத்தில்-: அவர்களைப்போல் அல்லாமல் எம்பெருமானுக்கே அடிமைப்பட்டிருக்கிறோமே என்று தன் மன உறுதியை நினைத்து உகந்து பேசுகிறார். திருவாசிரியமாகிற இப் பிரபந்தத்திற்கு பகவானின் பரத்வ ஸ்தாபனத்திலேயே நோக்கு என்று பெரியோர் கூறுவர். மஹாலக்ஷ்மியைப் போன்றவள் இப்பெண்; பிருஹஸ்பதியைப் போன்றவர் இவ்வறிஞர். வீமனைப் போன்ற வலிமையுள்ளவன் இவன். சூரியனைப் போன்ற ஒள் டலம் என்று கூறி உவமேயத்தின் சிறப்பை அறியச்செய்வது ஒரு வகை. ஆனால், பகவானின் திருமேனி வைலக்ஷண்யத்திற்கு எதை உவமையாகக் கூறுவது! உவமை கிடைக்கவில்லை. அவனே தனக்கு உவமை இல்லாதான். எப்படியாவது உவமை கூற வேண்டும் என்று நினைத்தார். 'மரதகக்குன்றம்' என்றார். பகவா னின் திருவரையில் பீதாம்பரம் திருமுடியில் திருவபிஷேகம்; தி மேனியில் திருவாபரணங்கள், செங்கனிவாய், கமலத்தடங்கண் நீலமேனி, எல்லாவற்றுக்கும் மேலாக திருவனந்தாழ்வான்மீ திருக்கண்வளர்தல் ஆகியவற்றுக்கு மரதகக் குன்றம் உவமை இக்குன்றத்திற்குச் செந்நிற மேகம் பீதகவாடை; செஞ்சுடர் பரிதிகிரீடம், சந்திரன் நக்ஷத்திரம் ஹாரம்; பவளச்செவ்வாய் திருக்கண்கள் பவழமயமான இடங்கள் இப்படிப்பட்ட மக கடலில் பள்ளிகொண்டிருக்கிறது என்கிறார். உபமானமே இ லாதவனுக்கு, உலகில் இல்லாத ஒன்றை ஒருவாறு உவமையாக்கி கூறுவது அபூதோபமை. இல்லாத உவமை. இவ்வாறு ஆழ்வா கூறிப் பகவானின் கிடையழகையும், பாசியில் பசும்புறம் போ றிருக்கும் திருமேனி நிறத்தையும் அனுபவிக்கிறார். தெய்வ குழாங்கள் கைதொழக்கிடந்த இவனே ஓங்கி உலகளந்தா என்கிறார்.

'த்ரிவிக்ரம! த்வச்சரணம்புஜத்வயம் மதீயமூர்த்தானம் கதா அலங்கரிஷ்யதி' என்று ஆளவந்தாரைப்போல், பகவானின் திருவடிகளை சென்னியில் சூடவேண்டும் என்று பரமபக்தர்கள் ஆசைப்படுவார்கள். திருவடிகளைச் சூடிக்கொண்டுவிட்டால் ஆசை தீர்ந்துவிடலாம். ஆனால் பாரிப்புதான் மிகச்சிறந்தது. திருவரங்கம் செல்லவேண்டும், திருமலைக்குச் செல்லவேண்டும் என்று சிந்திப்பதே மிகவும் சிலாக்யம் 'அர்ச்சிராதிகதி, அக்ரூர யானம்' போலே. பகவானின் திருவடிகளைப் புனையவேண்டும் என்று நிச்சலும் சிந்திப்பவர்களுக்குப் பரமபதத்தையே கொடுத்தாலும் பாவோ நாந்யத்ரகச்சதி' என்று வெறுத்துவிடுவர். ஸம்ஸாரிகளைப்போல் க்ஷுத்ரபலன்களை விரும்பி அலையாமல் பகவத்விஷயத்தில் மிக்க அநுராகம் கொண்டிருப்பதே சிறந்தது என்கிறார். பகவானிடம் பக்திகொண்டிருப்பதே சாலச்சிறந்தது என்று கூறப்பட்டது.

பக்தி அவனடியாரளவும் சென்று ஊன்றினால்தான் பகவத் பக்தி ஏற்பட்டிருப்பது உண்மையாகும். பிரயோஜனாந்தரபரர்களான தேவதைகளுக்காகப் பரம கருணையுடன் பாற்கடல் கடைந்த வரலாற்றை 'வரைபுரை திரைபொரு......தடவரை சுழற்றிய' என்று கூறி, உடம்புநோவக் கடல்கடைந்து அமுதம் கொடுத்த மகோபகாரத்தில் ஈடுபட்டுத் துவண்டிருக்கும் அடியவர்க்கே ஆட்பட்டிருப்பது பொருத்தமுடையது என்கிறார்.

அப்படிப்பட்ட அடியார்களைப் பின்தொடர்ந்தார். அவர்கள் எப்போதும் பகவானுக்குப் பல்லாண்டு பாடுவதையே தொழிலாகக் கொண்டிருந்தார்கள். இதுவே சிறந்தது; இதுவே நல்வழி; இதுவே பொழுதுபோக்கு! இப்படிப்பட்ட வாய்ப்பு தமக்குக் கிடைத்தால் நன்றாக இருக்குமே! இதுவே பெரும்பேறு! அவனை வருத்திப் பயனடைந்து செல்பவர்களைப்போல் அல்லாமல் அவன் செய்த பெருஞ்செயலுக்குப் பல்லாண்டு பாடவேண்டும். அத்வாரகமாகவும் ஸத்வாரகமாகவும் உலகையும் தேவதைகளையும் படைத்து ரக்ஷிக்கும் ஆச்சரியமான ஞானசக்திகளைக் கொண்ட மாமுதலடிகளை வாழ்த்தவேண்டும் என்கிறார்.

என்ன ஸௌலப்யம்! என்ன ஸௌசீல்யம்! அடியார்களுக்காகத்தன்னையும் அழித்துக்கொண்டு உபகரிக்கும் அவனுக்கே

யன்றோ உலகம் அடிமையாக இருக்கமுடியும்! தாள்பரப்பிமண் தாவிய எம்பெருமானுக்கே பல்லாண்டு ஏற்கும். தாமரைக் காடு என்று தொடங்கித் திருமேனி அவயவ சோபைகளை அனுபவிக்கிறார். எம்பெருமான் ஒரு தாமரைக்காடு!

தாம் நினைத்தபடியே உலகில் எல்லோரும் பகவானை வணங்குகிறார்களா ? என்று ஆழ்வார் ஆராய்ந்துபார்த்தார் ஜனங்களின் போக்கு மாறிக்கிடக்கிறது. நிலையில்லாத பலன் களில் ஆசைகொண்டு அவற்றைப் பெற 'ஐயப்பன், ஆறப்பன்' எட்டப்பன் என்று மருண்டு ஓடிப் பாழாய்ப்போகிறார்களே! என்ன பரிதாபம்! என்று கதறுகிறார். இவருடைய கதறல் திரிவிக்கிரமனின் திருவடிகளுக்கும் மேலாக உயர்ந்து சென்ற தாம். பிள்ளையைப் பெற்று வளர்க்கும்போது பலவகையான வருத்தங்கள் அடைந்தாலும் நன்மையே செய்துபோகும் தாயை உபசரித்துக் கொண்டாடவேண்டி இருக்க ஒரு மணைகட்டையை ஆதரித்து அதைக் கொண்டாடுவதுபோல் இருக்கிறதே இவர் களின் செயல்! என்கிறார்.

[மாதர்கள் பிரசவித்தவுடன் அந்தத் தாயையும் குழந்தையையும் நீராட்டுவது மலையாள நாட்டு வழக்கமாம். அவ்வாறு நீராட்டுவது தாய்க்கு உடல்நலக்கேடு அளிக்கும் என்பதால், அந் தாய்க்குப் பதில் ஒரு மணைக்கட்டையை நீராட்டுவது இடைக் கால வழக்கத்தில் வந்ததாகக் கூறுவர்]

க்ஷுத்ர தெய்வங்களை ஆராதிப்பதே கடினம். அவ்வாறு ஆராதிப்பது என்றென்றும் (பல பிறவி எடுத்து) நித்யஸம்ஸாரி யாக இருப்பதற்கே வழியாகும் என்கிறார்.

ஆழ்வாரின் இத்துயரம் தீர்க்க யாருமே முன்வரவில்லை. அவர் களைப்போல் அலைந்து அனர்த்தப்படாமல், எம்பெருமானுக்கே அடிமைப்பட்டிருக்கிறோமே என்று தன் மனவுறுதியை நினைத்து உகக்கிறார். 'ஒரு பொருள் புறப்பாடின்றி முழுவதுமகப்பட கரந்து, ஓராலிலைச் சேர்ந்த எம்பெருமாமாயனையல்லது, ஒரு மாதெய்வம் மற்றுடை 'யமோ யாமே' என்று கூறி முடித்தார்.